அப்படிப்பட்ட முயற்சிகள் எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை. எந்த இடத்தில் இப்படிப்பட்ட குறைகள் இருக்கின்றன எனத் தெரிவித்தால்—அந்த இடத்தில் ஒரு பொதுவான அளவை எடுத்து, அந்தந்த வயதிலே உள்ள குழந்தைகள் இந்த அளவுதான் இருக்கும் என்ற அடிப்படையில் தைத்துக் கொடுக்கிறார்கள்; சில குழந்தைகள் குண்டாகவும், சில குழந்தைகள் ஒல்லியாகவும் இருப்பதால், இப்படிப்பட்ட வேறுபாடுகள் ஏற்படும்; ஆகவே, அந்தந்தப் பகுதியிலே இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் எடுத்துச் சொன்னால்—நிச்சயமாக அந்தக் குறைகள் களையப்படுவதற்கு வழிவகைகள் ஏற்படுத்தப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சோ. பாலகிருஷ்ணன்.

திரு. சோ. பாலகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவிற்கு மத்திய அரசு நிதி வழங்கவில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஐ.சி.டி.எஸ். என்ற திட்டத்தின்கீழ், நம்முடைய மாநில அரசுக்கு, குழந்தைகள் சத்துணவிற்காக நிதி வழங்கப்படுகிறது என அறிகிறேன். அதைப்பற்றிய விவரங்களை அமைச்சர் அவர்கள் கூறுவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திருமதி இரா. இந்திரகுமாரி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐ.சி.டி.எஸ். என்பது வேறு; குழந்தைகளுக்கு அளிக்கப்படுகிற, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் என்பது வேறு. புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டத்திற்கு, எந்தவிதமான நிதியுதவியும் மத்திய அரசால் வழங்கப்படுவதில்லை. ஐ.சி.டி.எஸ். நம்முடைய தமிழகத்திலே 111 பிளாக்குகளிலேதான் இருக்கிறது. அதை வைத்துக் கொண்டு, அதை சத்துணவுத் திட்டம் என்று சொல்லிவிட முடியாது. 111 பிளாக்குகளிலேதான் அந்தக் குழந்தைகள் சாப்பிடுகிறார்கள். மேலும், அவற்றிற்கான சம்பளத்திற்கு மட்டும்தான் மத்திய அரசு தருவதற்கு ஏற்பாடு செய்திருக்கிறதேயொழிய, உணவுக்குரிய தொகைகள் அனைத்திற்கும் மாநில அரசுதான் வழங்கிக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். அதுவும் 111 பிளாக்குகளிலேதான். ஆகவே, ஐ.சி.டி.எஸ். என்பது வேறு; புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம் என்பது வேறு.

மாண்புமிகு பேரவைத் தலைவர். வினா எண் 216, திரு. கே. ஏ. மனோகரன், இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திரு. மு. வெங்கடராம ரெட்டி., மாண்புமிகு வனத் துறை அமைச்சர்.

216—

ஒசூரில் உயிரியல் பூங்கா (Zoo) அமைக்கும் திட்டம்.

*** 14683—திரு. கே. ஏ. மனோகரன்:**

மாண்புமிகு வனத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[1994 ஏப்ரல் 6

(அ) ஓசூரில் ஓர் உயிரியல் பூங்கா (Zoo) அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ், வனத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. மு. வெங்கடராம ரெட்டி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் இல்லை என்று சொல்லி விட்டார். தற்போது, கர்நாடக மாநிலத்தில், மைசூரில் ஒரு Zoo இருக்கிறது. அதுபோல, இங்கே சென்னையிலே ஒரு Zoo இருக்கிறது. இதற்கிடையில் 600 மைல் தொலைவில் எந்த Zoo-வும் இல்லை. இப்போது ஓசூர் தொழில் மையமாகி இருக்கிற ஒரு நகரமாக இருக்கிறது. அங்கே அடிப்படை வசதிகளும் இருக்கின்றன. 'பேரண்டஹள்ளி' என்ற ஒரு பாரெஸ்டும் இருக்கிறது. அங்கே Zoo-வை ஏற்படுத்த அரசு முன்வருமா; அதனைப் பரிசீலிக்குமா என்பதோடு, வனத்துறை அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதியில் நாட்ராபுரம், அஞ்செட்டி, நெட்டமுல்லாளம் ஆகிய ஊர்களுக்கு வந்தார்கள். அங்கே, Elephant Sanctuary, Elephant Safari ஆகியவை ஏற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன என்ற செய்திகள் எல்லாம் வந்தன. கர்நாடகாவில் பந்திப்பூர் பாரெஸ்ட் உள்ளதைப்போல, ஓசூரில் சரியான இடம் இல்லையென்றால், Elephant Sanctuary, Elephant Safari இடத்திலேயாவது, ஒரு Zoo-வை அமைக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. லாரன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறைந்து வரும் வன உயிரினங்களைக் காப்பதற்கும், அவ்வினங்களின் எண்ணிக்கையைப் பெருக்குவதற்கும் அடிப்படை ஆதாரமாக விளங்கும் இடமாக உயிரியல் பூங்காக்கள் அமைக்கப் படுகின்றன. மேலும், வன உயிரினங்கள் பற்றிய அறிவையும், விழிப்புணர்ச்சியையும் பொதுமக்களிடையே வளர்க்க, உயிரியல் பூங்காக்கள் விளங்குகின்றன. அதன் அடிப்படையில், தமிழகத்தில் வண்டலூரில், நவீன உயிரியல் பூங்கா ஒன்று, 5.10 ஹெக்டேர் நிலப் பரப்பில் உருவாக்கப்பட்டிருக்கிறது. அதற்கு 7 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டு, அதைக் கொண்டு பணிகள் எல்லாம் முடிந்திருக்கின்றன. இன்றைக்கு அந்தப் பூங்கா, இந்தியாவிலே, மிகச் சிறப்பு வாய்ந்த பூங்காக்களுள் ஒன்று என்பதை இங்கே நான் சொல்லிக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அங்கே சிங்க உய்விடங்களுடைய ஒரு 'சஃபாரி'—'லயன் சஃபாரி பார்க்'—அமைக்கப்பட்டிருக்கிறது. அதைப்போல, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்ற பின்னர்,

1994 ஏப்ரல் 6]

அந்த வண்டலூர் பூங்காவை நவீனமாக ஆக்குகிற முயற்சியில், அதற்காக ஆண்டுதோறும் 1-1/4 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். அங்கே ஒரு 'ரெப்டைல் ஹவுஸ்'—பாம்புகள் போன்ற ஊர்வன இருப்பதற்காக, 'ரெப்டைல் ஹவுஸ்' அங்கே உருவாக்கப்பட்டிருக்கிறது. இரவு விலங்குகளுடைய கூடம் ஒன்று இங்கே அமைக்கப்பட்டிருக்கிறது. அதனுடைய என்ட்ரன்ஸ் காம்ப்ளெக்ஸ் சிறப்பாக்கப்பட்டிருக்கிறது. லைட்டிங் பெசிலிட்டீஸ் செய்யப்பட்டிருக்கிறது. அதேபோல், மிருகங்களிடமிருந்து வருகிற கழிவுநீரை ஒரு சுகாதார சுற்றுப்புறத்தோடு வைப்பதற்காக அங்கே கழிவுநீரை அப்புறப்படுத்துகிற அற்புதமான இடங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. எனவே, இந்த அரசு, வண்டலூர் நவீன உயிரியல் பூங்காவைச் சிறப்பான ஒன்றாக அமைப்பதற்குப் பணி செய்து வருவதோடு, தமிழகத்தைப் பொறுத்தவரை, பல்வேறு தனியார்கள் கூட, நகரமன்றங்கள் போன்ற பல உயிரியல் பூங்கா சங்கங்கள் எல்லாம் அமைக்கிறார்கள். எனவே, அரசாங்கம் மட்டுமல்ல, ஓசூர் பகுதி என்பது தொழில் துறையில் முன்னேற்றம் அடைந்துள்ள பகுதி. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் போன்றவர்கள் எல்லாம் அந்தப் பகுதியிலே மிகுந்த அக்கறை எடுத்து, தொழில் வல்லுநர்களை அணுகிச் செய்வார்களேயானால், தனியார்களே இப்படிப்பட்ட பூங்காக்களை அமைக்க முடியும். மேல்மருவத்தூர் ஆதி பராசக்தி கோயிலைச் சார்ந்தவர்கள் இப்போது உயிரியல் பூங்கா ஒன்றை அமைக்க வேண்டுமென்று தமிழக அரசுக்கு எடுத்துத் தெரிவித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் இதய தெய்வம் புரட்சித் தலைவி அவர்கள் அங்கே ஒரு வன உயிரியல் பூங்காவை உடனடியாக நிறுவுவதற்குரிய அடிப்படைக் காரணங்களைக் கண்டறிந்து நடவடிக்கை எடுப்பதற்காக எங்களைப் பணித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையில் அவர்களுடைய உத்தரவை நாங்கள் சிரமேற்கொண்டு அங்கே உயிரியல் பூங்கா ஒன்றை அமைப்பதற்குத் தேவையான பணிகளைச் செய்து வருகின்றோம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 11.10

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 217, திருமதி கே. மரியம் உல் ஆசியா; மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர்.

217—

திருச்செங்கோட்டில் கண்ணகிக்கு பத்தினிக் கோட்டம் அமைத்தல்.

*** 23567—திருமதி கே. மரியம் உல் ஆசியா :**

மாண்புமிகு செய்தி மற்றும் விளம்பரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—